# பிறிஸ்பேன் தமிழ்ப்பாடசாலை இணை
## Brisbane Tamil School Inc.

PO Box 1041 Email: bristamilschool@yahoo.com.au
Mt Ommaney Qld 4074 Web: www.brisbanetamilschool.org

**Brisbane Campus**
Holland Park State High School
Bapaume Road, Holland Park

**Gold Coast Campus**
Southport State High School
Smith Street, Gold Coast

**Toowoomba Campus**
Darling Heights State School
Wuth Street, Darling Heights

**Brisbane Northside Campus**
Earnshaw State College, Cnr of
Earnshaw & Tufnell Roads, Banyo


---

<u>பேச்சுப் போட்டி – மேற்பிரிவு</u>

<u>Speech- Senior division</u>

<u>பிறந்த திகதி (DOB) - 01.07.2012 - 30.06.2013</u>

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

**<u>ஒற்றுமை</u>**

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு” என்பது பாரதியாரின் நல்வாக்கு. ஒற்றுமை பலத்தைத் தருகின்றது. ஒற்றுமை மகிழ்ச்சியைத் தருகின்றது. ஒற்றுமையானது நாடுகளிடையே, மதங்களிடையே, இனங்களிடையே இருக்க வேண்டும். அப்போது தான் மனித குலம் மேம்படும். போர்களும், பிரச்சனைகளும் இன்றிப் பூமியும் அமைதி காணும்.

வாழ்க்கையில் ஒற்றுமை ஏன் அவசியம்? ஒற்றுமையாகச் செயற்படும் போது, புதிய சிந்தனைகள் பிறக்கின்றன. பல்வேறுபட்ட திறமைகள் ஒன்று சேர்கின்றன. பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கின்றது. கூட்டு முயற்சி மகிழ்ச்சியைத் தருகின்றது. கூடி வேலை செய்வது களைப்பைப் போக்குகின்றது. ஒன்று கூடிச் செயலாற்ற, வெற்றியும் எம்மை வந்து சேர்கின்றது.

வீட்டிலும், நாட்டிலும் ஒற்றுமை இருக்க வேண்டும். இனங்கள் இடையே நல்லிணக்கம் பேணப்பட வேண்டும். ஒற்றுமையால் உறவுகள் நலம் பெறும். புரிந்துணர்வு உண்டாகும். உலக அமைதி பேணப்படும். வாழ்வில் மேன்மை உண்டாகும். வீட்டில் ஒற்றுமை இருந்தால் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். நாட்டில் ஒற்றுமை இருந்தால், வளர்ச்சி ஏற்படும். சகிப்புத் தன்மையும், பொறுமையும் இருந்து விட்டால் போதும், எம்மால் ஒற்றுமையாக வாழ முடியும்.

உயர்வு, தாழ்வு என்ற பாகுபாட்டால் தான் வேறுபாடு வருகின்றது. அதுவே பிரிவினையை ஏற்படுத்துகின்றது. உருவங்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் எம் உள்ளங்களில் இருக்கக் கூடாது. சிறுவர்கள் நாம் என்றும் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும்.

ஒன்று கூடி வாழ்வோம் ஒற்றுமையால் உயர்வோம்.